பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஆண்டு வைகாசி 01 ம் புதன்கிழமை [15—05—1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 162

# ஓமந்தையிலிருந்த படையினர் புலிகளினால் விரட்டியடிப்பு!

## இரு நாள் சண்டையில் 50 சிப்பாய்கள் பலி
## இருபது வீரவேங்கைகள் உயிர்த் தியாகம்

யாழ்ப்பாணம், மே 15

ஓமந்தைக்கு வடக்கே இறம்பைக்குளம், கோழியகுளம், பூவரசங்குளம், மாதர்பணிக்கர் மகிழங்குளம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினரை கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் விடுதலைப் புலிகள் சுற்றிவளைத்துத் தாக்கினர். இந்தத் தாக்குலினால் இப்பகுதிகளிலிருந்து படையினர் ஓமந்தைக்குத் தெற்கே பேயாடிகூழாங்குளம் வரை விரட்டியடிக்கப்பட்டனர்.

இந்த இருநாள் யுத்தத்தில் ஐம்பதுக்கும் அதிகமான ஸ்ரீலங்கா இராணுவத்தினர் உயிரிழந்தனர். விடுதலைப் புலிகள் தரப்பில் இருபது போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

ஞாயிறன்று காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை விடுதலைப் புலிகள் நடத்திய பெரும் தாக்குதலை அடுத்து ஓமந்தைக்கு வடக்கே நிலைகொண்டிருந்த ஆயிரத்துக்கும் அதிகமான படையினர் பின்வாங்கி ஓமந்தைப் பகுதிக்குச் சென்றனர்.

மீண்டும் நேற்று முன்தினம் ஓமந்தைப் பகுதியிலிருந்த படையினர் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது என்றும்—

இத்தாக்குதலின் மூலம் படையினர் பேயாடிக்கூழாங்குளம் வரை விரட்டியடிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-த]

## பவன் கவச வாகனங்கள் சேதம்

யாழ்ப்பாணம், மே 15

ஓமந்தைப் பகுதியில் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் படையினரின் 2 பவள் கவச வாகனங்கள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

## மட்டக்களப்பில் 2 படையினர் பலி!

கொழும்பு, மே 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் ஒன்றில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

கொழும்பில் இராணுவ அதிகாரிகள் இதனை நேற்றுத் தெரிவித்தனர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ]

## சூறாவளிக்கு 26 பேர் பலி

டாக்கா, மே 15

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிலும் மற்றும் சில மாவட்டங்களிலும் கடந்த திங்கள் இரவு வீசிய சூறாவளியில் சிக்கி 26 பேர் உயிரிழந்தனர்.

மேலும் 13 பேர் காணாமற் போய்விட்டனர் என்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 500 க்கு அதிகமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

## நேபாள தேர்தல் முடிவு

காத்மண்டு, மே 15

நேபாள நாடாளுமன்றத்துக்கு நடந்த தேர்தலில் நேற்று இரவு வரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின்படி, நேபாள காங்கிரஸுக்கு 40 ஆசனங்கள் கிடைத்தன.

கம்யூனிஸ்ட் கட்சிக்கு 32 ஆசனங்களும் ஏனைய உதிரிக் கட்சிகளுக்கு 8 ஆசனங்களும் கிடைத்தன.

இதற்கிடையில் — நேபாள பிரதம மந்திரி

[3 ஆம் பக்கம் பார்க்க]

## களம்பலியான வேங்கைகள்

யாழ்ப்பாணம், மே 15

கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வவுனியாவில் இடம்பெற்ற மோதல்களின் போது களப்பலியான இருபது வேங்கைகளினதும் பெயர் விவரங்கள் வருமாறு:-

லெப்டினன்ட் கஸ்ட்ரோ இராசப்பு [விமலநாதன்-மூதூர்], 2 ஆவது லெப்டினன்ட் தேன் [சுந்தரலிங்கம் விமலச்சந்திரன் - செம்மலை], 2 ஆவது லெப்டினன்ட் ஜெனா [யோகநாதன் பிரான்ஸிஸ் - மன்னார்], 2 ஆவது லெப்டினன்ட் மண்டேலா [தமிழ்ச்செல்வன் தமிழழகன் - ஆறுகாம்மடம், யாழ்] 2 ஆவது லெப்டினன்ட் விமாசன் [வர்ராளசிங்கம் விக்கினேஸ்வரன்-நெடுங்கேணி], 2 ஆவது லெப்டினன்ட் ரியூடன் [த. கிறேசியன் - நல்லூர்], 2 ஆவது லெப்டினன்ட் செட்டி [பெரியசாமி லோகேஸ்வரன்-

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வட்டுக்கோட்டையில் ஷெல்! இருவர் பலி!! ஐவர் காயம்!!!

யாழ்ப்பாணம், மே 15

வட்டுக்கோட்டைப் பகுதியை நோக்கி நேற்று மாலை 6 மணியளவில் பலாலி முகாமிலிருந்து ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அரசடிப் பகுதியிலும், 'யாழ்ப்பாணக் கல்லூரிப் பகுதியிலும் விழுந்த ஷெல்களினால் 2 வயதுக் குழந்தை உட்பட இருவர் உயிரிழந்தனர்; ஐவர் காயமடைந்தனர்:

கல்லூரி வளவிலுள்ள தென்இந்திய திருச்சபையின் அச்சகத்தின் ஒரு பகுதி எரிந்து சேதமானது. தேவாலயமும் சிறு சேதமடைந்தது. இரண்டு வீடுகளும் சேதமடைந்தன.

சதாசிவம் ராகுல் [2 வயது] என்ற குழந்தையும், தெல்லிப்பளையிலிருந்து இடம் பெயர்ந்து வந்த ராஜசாமு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வல்வையிலும் பலாலி ஷெல்! சிறுவன் பலி! ஐவர் காயம்!!

யாழ்ப்பாணம், மே 15

வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கியும் நேற்று மாலை 6.10 மணியளவில் ஆட்லறி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். ஐவர் காயமடைந்தனர்.

திருவில் விளையாட்டு மைதானத்திலும், வல்வெட்டியிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

திருவில் மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த வேலும் மயிலும் பரஞ்சோதி [திருவில்] என்ற 14 வயது சிறுவனே இச் சம்பவத்தில் உயிரிழந்தான்:

மைதானத்தில் நின்ற சிவா

[3 ஆம் பக்கம் பார்க்க]

## பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக
# 3 நிபந்தனைகளையும் அரசு கைவிட்டு விட்டது?

கொழும்பு, மே 15

விடுதலைப் புலிகளோடு பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசு முன்வைத்திருந்த மூன்று நிபந்தனைகளையும் அது இப்போது கைவிட்டு விட்டது.

— இவ்வாறு இந்திய வானொலி தனது கொழும்புச் செய்தியாளரை ஆதாரம் காட்டி நேற்று அறிவித்தது.

இம்மாத இறுதியில் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி, இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடங்கும் பொருட்டு ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே உயர்நிலைத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. — இவ்வாறு அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

★ இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைகளில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் பங்குபற்ற வேண்டும்.

★ ஆயுதங்களை வைத்திருக்கும் குழுக்கள் பேச்சுக்களுக்கு முன்னர் ஆயுதங்களைக் கைவிடுவதாக அறிவிக்க வேண்டும்.

★ சம்பந்தப்பட்ட சகல குழுக்களும் பங்குபற்றும் விதத்தில் பேச்சுக்கள் நடைபெற வேண்டும்.

—இவ்வாறு முன்னர் விதித்திருந்த மூன்று நிபந்தனைகளையுமே ஸ்ரீலங்கா அரசு இப்போது கைவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

நடந்து முடிந்த உள்ளூ

[3 ஆம் பக்கம் பார்க்க]

## வாகன அணிமூலம் மீண்டும் மடு அகதிகளுக்கு உணவு

யாழ்ப்பாணம், மே 15

மடு அகதி முகாமுக்கு உணவுப் பொருள்களை ஏற்றிக் கொண்டு நாளை வியாழக்கிழமை வாகன அணி ஒன்று அங்கு செல்ல இருக்கிறது.

கடந்த மாதம் 27 ஆம் திகதி மடு அகதி முகாமுக்கு உணவுப் பொருள்களுடன் வந்து, திரும்பிய வாகன அணி மீது தாண்டிக்குளத்தில் வைத்து வான்த் தாக்குதல் நடத்தப்பட்டதும்—

அதை அடுத்து மடு அகதி முகாமுக்கான உணவு விநியோகம் தடைப்பட்டதும் தெரிந்தவையே.

இந்த விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருடன் ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலய அதிகாரி பேச்சுக்களை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



முந்திரிக்கொட்டை மாதிரி நிபந்தனைகளைப் போட்டுட்டு இப்ப நின்டு முழுசுறனம்......!

## சின்னமடுப் பகுதி இராணுவத்தினர் 8 மணி நேரம் தொடர் ஷெல்வீச்சு!

யாழ்ப்பாணம், மே 15

காரைநகர் சுற்றுக்காவற்றுறை சின்னமடு பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக் காலை 8 மணி தொடக்கம் மாலை சுமார் 4 மணிவரை இடைவிடாது ஷெல் தாக்குதலை நடத்தினர்.

புளியங்கூடல் அம்மன் கோவிலை அண்டிய பகுதிகளிலும் சரவணை, பள்ளம்புலம் கைத்தனை, வேலணைப் பகுதிகளிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

நாரந்தனை, அம்புராகை பகுதியில்—தரையில் இருந்து —கடலில் இருந்தும் இப்பகுதிகளில் துப்பாக்கி வேட்டுக்களும் கேட்டன.

இதேவேளை—

நேற்று முற்பகல் 11 மணியளவில் சின்னமடுப் பகுதியின் பின்புறமாக தீ சுவாலை விட்டு எரிந்ததாகவும்—

படையினர் வீடுகளை தீவைத்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-125]

## உன்னிச்சையில் தேடுதல்; 12 தமிழரின் வீடுகள் எரிப்பு

மட்டக்களப்பு மாவட்டம், உன்னிச்சை 6 ஆம் கட்டைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இராணுவத்தினர் தேடுதலில் ஈடுபட்டனர்.

அப்போது மிதிவெடியில் சிக்கி இரு இராணுவத்தினர் தமது கால்களை இழந்தனர்.

அதன் பின்னர் படையினர் அப்பகுதியில் தமிழர்களுக்குச் சொந்தமான 12 வீடுகளை எரித்தனர்.

சில பொதுமக்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## கரும்புலிகள் எழுச்சி நாள் குடாநாட்டில் அனுஷ்டிப்பு

கடற் கரும் புலிகளின் எழுச்சி நாள் குடாநாடு எங்கும் நேற்று உணர்ச்சி மயமாகக் கொண்டாடப்பட்டது.

வீதிகள் மற்றும் சந்திகள் தோறும் கடற் கரும்புலிகளான கப்டன் ஜயந்தன், கப்டன் சிதம்பரம் ஆகியோரின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு, மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

தோரணங்கள் மற்றும் சிகப்பு மஞ்சள் கொடிகளால் வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

கடற் கரும்புலிகள் நினைவாக வல்வெட்டித்துறை, வட்டுக்கோட்டை, சுட்டுவில் ஆகிய இடங்களில் நேற்று மாலை மாபெரும் எழுச்சிக் கூட்டங்களும் நடைபெற்றன. இக்கூட்டங்களில் பெரும் எண்ணிக்கையான பொது மக்கள் பங்குபற்றினர். [உ-த 3-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆரம்ப சுகாதார வழிகாட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F R C.P. D C H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவ பீடம்] எழுதியது. கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி போன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம் விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

பன்டெம் கோழி முட்டைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். இவிபட்டிபிடிப்பவர்கள், 131/1. அம்பலவாணர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

[16817]

### தேவை

தமிழ் — ஆங்கிலம் தட்டச்சு இயந்திரங்கள் உடன் தேவை. பழுதடைந்த தட்டச்சு இயந்திரங்களும் வாங்கப்படும். பியூட்டா, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். கிளை: பிரதான வீதி, மானிப்பாய்

[C/4936]

### தவறிவிட்டது

சிவப்பிரகாசம் பவானி ஆகிய எனது [686211444V] இலக்கமுடைய அடையாள அட்டையும், பேர்சும் பாரிசுக் ஒன்றும் 8-5-1991 இல் கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

[16818]

### ஆங்கிலக் கல்வி

G. C. E (O/L) 90 ஆங்கில விசேட வகுப்புகளும், ஆண்டு 1, 2, 3, 4களுக்கான சொற்பொழிவு வகையும் (Elocution) மாணவர்களின் வசதிகளுக்கேற்ப விரைவில் ஆரம்பமாகவுள்ளன. By Manjula Balasingam 2/2, அம்மன் வீதி, சுந்தர்மடம். [16787]

### செவ்வாய் மாற்றம்

இன்று செவ்வாய் மாற்றம். வியாழனுடன் கூடி 5-7-1991 வரை சனியின் செட்டபார்வையால் யுத்தம் தீவிரமடையும். ஆஸ்ட் வியாழ மாற்றத்தால் தனியும் ஜோதிடர்களுக்கும், இராசிகளின் பலன்களுக்கும் கனகா ரேடர்ஸ், திருநெல்வேலி. எழுதியவர் - பேராசிரியர் சத்தியதாஸன் [Mech B. Elec B]

[16811]

### புலமைப்பரிசில் பரீட்சை (ஆண்டு 5)

புதிய கல்வி நிலையத்தால் நடத்தப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை [இரண்டாவது] 19 - 05 - 1991 ஞாயிற்றுக்கிழமை மு.ப 8.00 மணி, மு.ப 10.30 மணி 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். பி.ப 4-00 மணி மக்கள் வைத்தியசாலை முன்பாக குலட்பிட்டி-ஆனைக்கோட்டை வீதியில் நடைபெறும். புலமைப் பரிசில் Day Class Weekend Class ஆரம்பமாகியுள்ளன.

[16821]

### வைத்தியம்

வேலணை வைத்தியர் திதம்பரப்பிள்ளை இராசரத்தினம் ஜே. பி. அவர்கள் இல. 121, இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தில் வைத்தியசாலைக் கிளையை ஆரம்பித்துள்ளார். சகல நோய்களுக்கும் எந்நேரத்திலும் சிகிச்சை அளிக்கப்படும்.

[4067]

### அதிபர்கள் சேவை

போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி கிரகித்த பொது அறிவு கல்விக் கொள்கையை உள்ளடக்கியது. அகிரன் வெளியீடு எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.


[சி/4932]

---

ஓம்

நயினை நாகபூஷணி அம்மன் துணை

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 10 — 5 — 1921

மறைவு: 15 — 04 — 1991

அமரர்

## வி. கே. கே. நல்லையாபிள்ளை

[அவர்கள்]

[பிரபல வர்த்தகர், நயினாதீவு]

நெருநல்லுளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்திவ்வுலகு - குறள்

சென்னையில் 15 04 91 இல் காலமான எமது குடும்பத் தலைவரின் மறைவை அறிந்து எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர் நண்பர்களுக்கு எமது குடும்பத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூஷணி அம்மனை பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீதேவி சண்முகதாசன்,
வாமதேவி துரைமணி.

52, அம்மன் றோட்,
சுந்தர்மடம், யாழ்ப்பாணம்

[16814]

---

ரி. வி., றேடியோ

தொழில் நுட்பவியலாளருக்காக

## யுனைற்றட் என்ஜினியர்ஸ்

தொழில்நுட்ப கல்வி நிறுவனம் வழங்கும்

வார இறுதி வகுப்புகள்

Advanced Video Technology. T. V. - Decks How it works full Circuit Study with Professional Circuits - Fault - Diagnosisg

★ [விளக்கவுரைகள் தமிழில்]

தொடர்பு:-
277/271 கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர்.

[16799]

---

## நோயாளர் துயர் துடைக்கும் பணிக்கான பயிற்சிப் பாசறை

நோயாளரை தங்கள் அன்புக் கரங்களால் பராமரிக்க சேவையுள்ளம் படைத்த 20 வயதுக்கும், 35 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பயிற்சியின் பின் வேதனத்துடன் சேவைக்கு அமர்த்தப்படுவார்கள். விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 31 — 05 — 1991

பயிற்சி நெறி நடத்துனர்,
"பாலம்" பொதுப்பணி மன்றம்,
572 மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்.

[16813]

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி

## கமலாம்பிகை இராசேந்திரன்

மலர்வு: 30 7 1924

உதிர்வு: 7 - 5 - 1989

எங்கள் அன்புத் தெய்வம் அம்மாவே! உங்கள் புன்னகை தவழும் இனிய முகம் எம் கண்களில் தெரிகிறதே. உங்கள் இனிய குரல் ஓசை எம் காதுகளில் ஒலிக்கிறதே. அம்மா, எம்மை நீங்கள் ஆறாத் துயரில் ஆழ்த்திச்சென்று ஆண்டு இரண்டு ஆகிறதே. எம்மை அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழவைத்த தெய்வமே! எங்கள் இதயத்தில் என்றும் உங்கள் நினைவுகள் நீங்காது நிலைத்திருக்கும். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்!
அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'சிவவில்லா.'
மானிப்பாய்.

[16788]

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கிருஷ்ணபிள்ளை கோபாலரத்தினம்

[செயலாளர், வடக்கு - கிழக்கு மாகாணசபை]



மலர்வு: 8 - 11 - 1932

உதிர்வு: 15 - 05 - 1989

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவை மறவாத!
மனைவி, மக்கள், மருமக்கள்,

கொக்குவில்

[16819]

---

யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி

## க. பொ. த. உயர்தர மாணவர் அனுமதி 1991

01. மேற்படி கல்லூரி மாணவர்கள் தமது பெயரை காரியாலயத்தில் 18 - 05 - 1991க்கு முன் பதிவு செய்யவும்.
02. பிற பாடசாலை மாணவர்கள் சேர்வு விண்ணப்பப் படிவத்தை 18 - 05 - 1991க்கு முன் காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.
03. பரீட்சை நேரசூசிகளை காரியாலயத்தில் 18 - 05 91க்கு பிந்தாமல் பெற்றுக்கொள்ளவும்.

[16816] - அதிபர்.

---

## கலை, வர்த்தகக் கல்லூரி

## C. C. A.

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

## A/L 93

1. பொருளியல் ... உதயன்
2. கணக்கியல் ... ஸ்ரீ
3. வர்த்தகம் ... இ. இரட்ணம்
4. அளவையியல் ... சயந்தன்
5. தமிழ் ... மீரா
6. இந்து நாகரிகம் ... ஜோதீஸ்வரன்
7. அரசியல் ... சீலன்
8. புவியியல் ... வேலாயுதபிள்ளை

ஆரம்பம்: காலை 8-00 மணி
சனி 18 - 05 - 1991

## A/L 91

முழுப்பாடத்திட்ட வினா - விடை வகுப்பு

| | |
|---|---|
| தமிழ் - மீரா | 12 - 1 |
| இந்துநாகரிகம் | 1 — 2 |
| பொருளியல் | 2 — 3 |
| கணக்கியல் | 3 - 4 |
| வர்த்தகம் | 12 - 1 |

## A/L 92

ஆரம்பம் சனி 18-05-1991
8.00 மணி

[சி-4944]

---

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 06 — 10 — 1967

உதிர்வு: 05 — 12 — 1991

## செல்வி இரத்தினம் ரோகிணி

(லக்ஷி)

நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும் அந்
நினைவினிலே உன் முகம் தோன்றியிருக்கும்
மாதங்களோ ஆறாயினும் உன் துயரங்கள் ஆறாது.
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்போமாக!

வாதரவத்தையை பிறப்பிடமாகவும், ஸ்கந்தபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட செல்வி இரத்தினம் ரோகிணி (லக்ஷி) அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு உடன் வந்து தேறுதல் கூறியோர்க்கும், மரணக் கிரியைகளில் கலந்து கொண்டோர்க்கும், அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்க வந்திருந்தோர்க்கும் எமது குடும்பத்தின் சார்பில் இதயம் நிறைந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் வாடும்:
இளையதம்பி இரத்தினம் குடும்பத்தினர்,
தகவல்: உதயன் [சகோதரன்]

இல. 562 ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி

[4069]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### என்ன செய்வார்?

கடந்த சனிக்கிழமை நடந்த உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் பிரேமதாச தலைமையிலான ஐ. தே. கட்சி அமோக வெற்றி ஈட்டியிருக்கிறது. அந்த வெற்றியை மனதில் வைத்து அரசியல் வட்டாரங்களில் பல வகையான ஊகங்களும், அனுமானங்களும் வெளிவரத் தொடங்கி உள்ளன.

இனப் பிரச்சினைக்குப் புதிய யோசனைகளை முன் வைத்துச் செயற்படக் கூடிய துணிவை, தேர்தல் வெற்றி ஜனாதிபதிக்குத் தந்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

உள்ளூராட்சித் தேர்தல் பெருவெற்றியை வைத்துக் கொண்டு, ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்குத் திடீர்த் தேர்தலை நடத்தக் கூடிய வாய்ப்புகள் மிக அதிகமாக உண்டு என்றும் அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

இரத்தக் களரியைத் தவிர்த்து, தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால் பிரேமதாச இரண்டு காரியங்களைத் துணிகரமாகச் செய்தல் வேண்டும்.

ஒன்று: ஜே. ஆர். அவசரப்பட்டுக் கொண்டு வந்த தனிநாட்டுக்குத் தடை விதிக்கும் அரசமைப்புக்கான ஆறாவது திருத்தத்தை நீக்குதல்.

இரண்டாவது: நாட்டின் ஒற்றையாட்சி முறையை ஒழித்து, சமஷ்டி ஆட்சிமுறையைக் கொண்டு வருவதற்கு அரசமைப்புச் சட்டத்தில் வகை செய்தல் [இது குறித்து நான்கு நாட்களுக்கு முன்னரும் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.]

இந்த இரண்டையும் செய்வதற்கு திரு பிரேமதாசாவுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பலம் வேண்டும். அது இப்போது இல்லையாதலால், புதிதாக ஒரு பொதுத் தேர்தலை நடத்தி அரசைப் பலப்படுத்தத் திரு பிரேமதாச எண்ணுவதற்கான சகல சாத்தியங்களும் உண்டு.

உள்ளூராட்சித் தேர்தலில் பெருவெற்றி கிடைத்துவிட்டது என்பதால் நாடாளுமன்றத் தேர்தலிலும், ஐ. தே. கட்சியினரால் தனித்து மூன்றில் இரண்டு பலத்தைக் கைப்பற்ற முடியும் என்று கருதக்கூடாது. அது சந்தேகத்துக்குரியது.

ஆகையால் தமக்குப் பக்கபலமாகத் தமிழரின் ஆதரவைப் பெறும் தேவை ஜனாதிபதிக்கு உண்டாகும். அவ்வாறாயின் அவர் வடக்கு-கிழக்கு மாகாணத்திலும் தேர்தலை நடத்த வேண்டும். இன்றைய சூழ்நிலையில் அதற்கான வழியைத் திறப்பதற்கு, அவர் புதிய அணுகுமுறைகளையும், உத்திகளையும், விட்டுக் கொடுத்தல்களையும் கைக்கொள்ள நேரிடும். அதற்கு அவர் தயாராக இருக்கிறாரா?

அவரை மேலோங்கி வளர்ந்து நிற்கும் இராணுவம் அனுமதிக்குமா? அவருக்குக் குழி பறிப்பதற்காக இராணுவத்துடன் இரகசியக் கூட்டுச்சேர்ந்ததாகக் [கடந்த ஜனவரியில் உலாவிய கதை] கூறப்படும் மகா சங்கம் தான் சகித்துக் கொள்ளுமா?

இந்தியத் தேர்தல் நெருங்குவதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்று.

ஜூன் மாத இறுதியில் இலங்கைக்கு உதவும் நாடுகளின் குழுவின் கூட்டம் நடைபெற இருப்பதும் கவனிக்கற்பாலது.

எப்படியோ, நிலைமை திருந்துவதற்கு வடக்கு-கிழக்கில் யுத்த நிறுத்தம் முதலாவது பிரதான தேவை என்பதை மறந்துவிடலாகாது.

# தமிழீழம் மலரும்போதுதான் எங்களது போராட்டம் ஓயும்

## புதுக்குடியிருப்புக் கூட்டத்தில் யோகி

புதுக்குடியிருப்பு, மே 15

தமிழீழம் மலரும் போது தான் எமது போராட்டம் ஓயும். இதற்கு உங்கள் அனைவரினதும் ஆதரவு தேவை.

புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்துகையில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் திரு யோகரட்ணம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் பேசியதாவது:-

தமிழீழ மக்களை பட்டினி போட்டுச் சாகடிக்க ஸ்ரீலங்கா அரசு முழுமூச்சாக முயற்சித்துக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் எமது மக்களின் விடுதலைப் போராட்ட உணர்வை மழுங்கடிக்கலாம் என்று அது எண்ணுகிறது.

அரசின் திட்டத்தை முறியடிக்கவே உப உணவுப் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளுமாறு வாங்களை நாம் கேட்டு வருகிறோம். அரசு விதிக்கும் பொருளாதாரத் தடையை வெற்றி கொள்வது ஒன்றே எமக்கு இன்றுள்ள வழி ஆகும்.

### புகையிலை, வெங்காயம் ஏன்?

ஆனால் இதனை உணராத எம் மக்களில் சிலர் இன்றும் கொழும்புக்கு ஏற்றுமதி செய்ய வெங்காயத்தையும், புகையிலையையும் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களும் உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருந்தால் இன்று பொருளாதாரத் தடையை பெருமளவு முறியடித்திருக்கலாம்.

ஆனால் அவர்கள் தாம் உற்பத்தி செய்த வெங்காயத்தையும், புகையிலையையும் கொழும்புக்கு ஏற்றுமதி செய்வதற்காக எம்மை இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு கேட்கின்றனர்.

### சமதர்ம தமிழீழம்

நம் சமதர்ம தமிழீழத்தை உருவாக்கவே போராடுகிறோம். எமது தமிழீழத்தில் சாதி, மத, பிரதேச வேறுபாடுகள் இல்லை.

மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு போராளியும் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒரு போராளியும் ஒன்றிணைந்து தமது நெஞ்சங்களையே வெடிக்கவைத்து பருத்தித்துறையில் எதிரியின் கடற்படைக் கப்பலை நாசமாக்கியுள்ளார்கள். இத்தகைய ஓர் உணர்வையே நாம் உங்களிடமும் எதிர்பார்க்கின்றோம்.

எங்களது புனிதமான போராட்டத்தில் அனைவரும் இணைந்து கொள்ளுங்கள்.

### அனுராதபுரம் வரை புலிக் கொடி

நீங்கள் யாரைக் கேட்டு இப் போராட்டத்தை ஆரம்பித்தீர்கள் என்று சிலர் எம்மைப் பார்த்துக் கேட்கின்றனர்.

இன்றைய துன்ப நிலைதான் அவர்களை ஆயுதம் எடுக்க வைத்தது என்பதை நாம் அறிவோம்.

அவர்களுக்கு நம் செல்வம் கூடியது இது தான். எமக்கு வீரம் இருந்தது விடுதலை உணர்வு இருந்தது. தமிழுணர்வு இருந்தது. தன்னம்பிக்கை இருந்தது. போராடுகின்றோம். உங்களுக்கும் அவ்வாறு இருந்தால் எம்முடன் போராட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள். அவ்வாறு நீங்களும் இணைந்து கொண்டால் வடக்கே அனுராதபுரம் வரையில், கிழக்கே அம்பாறை வரையில் புலிக்கொடி பறக்கும். இல்லையேல் புதுக்குடியிருப்பிலும் சிங்களக் கொடி பறக்கும்.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை எங்கே எந்தக் கொடி பறந்தாலும் எமது போராட்டம் ஓய்வது தமிழீழம் மலரும் போது தான். அதற்கு உங்கள் அனைவரது ஆதரவும் வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் முன்னணியைச் சேர்ந்த பராராஜசிங்கம், மற்றும் மகளிர் அணித் தலைவி, முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் முல்லைச்செல்வம், கட்டப்பவர் உரையாற்றினர். [க-126]

## ஊரடங்கு

கொழும்பு, மே 15

யாழ் குடா நாட்டில் நேற்று நண்பகல் 12 மணி முதல் இன்று காலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் விடுதலைப் புலிகள் வைத்த வெடிகுண்டுக் சிக்கி எட்டுப் படையினர் உயிரிழந்ததாகவும்—

அதனையடுத்தே ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதாகவும் வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. [உ-எ]

## மட்டக்களப்பில் தாக்குதல்!

கடந்த சனியன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் பல கிராமங்களில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

திருக்கோணமடு, சிப்பு, சரடிக்குளம், கதிரவெளி, வாகரை, மாங்கேணி ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து வெளியேறிய படையினர் காட்டுப் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்கள் கண்டல் இளம் பகுதியை வந்த போது அவர்கள் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்கள் நடத்தினர்.

இத் தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. [உ-த]

## இந்து இளைஞர் கொடிதினம்

யாழ்ப்பாண மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் உருவாக்கக் கொடி தின நிகழ்ச்சி இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு, நல்லை ஆதீனத்தில் நடைபெறுகிறது.

பேரவைத் தலைவர் திரு வே. க. தனபாலசிங்கம் தலைமையில் மிக அமைதியான முறையில் நடைபெறும் இக்கொடி தின வைபவத்தில் இந்து இளைஞர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

## நோயாளிகளுடன் கப்பல் இன்று புறப்படுகிறது

கொழும்பில் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான கப்பல் இன்று புதன்கிழமை புறப்படுகிறது.

கப்பலில் செல்ல பதிவு செய்த அனைத்து நோயாளர்களும், உதவியாளர்களும் தகுந்த ஆவணங்களுடன் இன்று காலை 6-00 மணிக்கு யாழ் போதனா வைத்திய சாலைக்கு சமுகம் கொடுக்கும்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். [இ 15]

# லொறிகளில் சென்ற அறுவர் கொழும்பில் கைது

## ஆஸ்பத்திரியில் இருந்தவரும் அவர்களில் ஒருவர்

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு லொறிகளுடன் சென்ற அறுவர் அங்கு பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். துப்பாக்கிச் சூடுபட்டுக் காயமடைந்த ஒருவரும் இவர்களில் அடங்குவார்.

கடந்த மாதம் 30 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இவர்களின் நிலை என்ன என்பது குறித்து இன்னும் தெரியவில்லை.

வலை வாயைச் சேர்ந்த துரைரத்தினம் சிவகுமார், துரைரத்தினம் சந்திரகுமார், ஐ. ஆறுமுகம், சி. சோமசுந்தரம், த. செல்வமணி, மிருசுவிலைச் சேர்ந்த ஒருவர் ஆகிய ஆறு பேருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இதுபற்றித் தெரிய வருவதாவது;

வலையிலிருந்து 2 லொறிகளுடன் கொழும்புக்குப் புறப்பட்ட இவர்கள் கடந்த மாதம் 27 ஆம் திகதி தாண்டிக்குளத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் அகப்பட்டனர்.

... என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர். அவர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கிருந்து ஏப்ரல் 30 ஆம் திகதி கொழும்பு களுபோவில் மருத்துவமனைக்கு கொண்டு சென்று அனுமதிக்கப்பட்டார்.

அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் அங்கு சென்ற பொலிஸார், காயமடைந்த வரையும் ஏனைய ஐவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்வதாகக் கூறிக் கூட்டிச் சென்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் எங்கே, எப்படி உள்ளனர் என்ற விவரங்கள் இதுவரையும் தெரியவில்லை.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொண்டும் உறுதியான தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று உறவினர்கள் தெரிவித்தனர். [அ-15]

## 3 நிபந்தனை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ராட்சித் தேர்தல்களில் ஜனாதிபதி பிரேமதாஸ தலைமையிலான ஐ. தேசியக் கட்சி அமோக வெற்றியீட்டியதைத் தொடர்ந்தே சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக இந்திய வானொலி மேலும் தெரிவித்தது. [உ-எ]

## வாகன அணி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நடத்தியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து மீண்டும் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டிருப்பதாகவும், விசேட ஏற்பாடுகளின் கீழ் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல அரசு ஒப்புதல் அளித்துள்ளதாகவும் தெரியவந்தது [ஓ 3]

## வல்லையிலும்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னந்தம் ரஜினிகாந்த் [16 வயது], அஜன்லால் [15 வயது] சுப்பிரமணியம் ராஜேஸ்வரன் [14 வயது] ஆகியோரும்—வல்வெட்டியில் தில்லைநாதன் சிவபாக்கியம் [55 வயது-புத்தூர்], இரத்தினம் அன்னப்பிள்ளை [59 வயது - நெல்லியடி] ஆகியோரும் காயமடைந்தனர்.

இந்த ஐவரும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [ஓ-15]

## வட்டுக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கேள் டானியல் [17 வயது] என்ற இளைஞருமே மரணமானவர்.

இறந்த குழந்தையின் தாயாரான சதாசிவம் பானுமதி [37 வயது], இறந்த டானியலின் குடும்பத்தவர்களான ராஜ் முகவல் [60 வயது], ராஜ் முகவல் புனிதம் [45 வயது] நாகேஸ்வதி [14 வயது] மற்றும் அராலியைச் சேர்ந்த தேவசகாயம் றொபின் [31 வயது] ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர்.

காயமடைந்த அனைவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [ஓ-15 3]

## நேபாளம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிருஷ்ணபிரசாத் பட்டராய் ராஜினாமா செய்துவிட்டார்.

தலைநகர் காத்மண்டுவில் உள்ள ஒரு தொகுதியில் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு பண்டாரியிடம் திரு பட்டராய் 700 வாக்குகளால் தோற்றுப் போனார்.

அதனைத் தொடர்ந்து திரு பட்டராய் பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்தார்.

திரு. பண்டாரி தாம் போட்டியிட்ட இன்னொரு தொகுதியிலும் வெற்றியீட்டினார்

## களப்பலி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அலம்பில்], 2ஆவது லெப்டினன்ட் நீசர்ட் [சித்திரவேல் நாகேந்திரன் - மூதூர்], 2ஆவது லெப்டினன்ட் அலேரசிஸ் [சந்திரன் ரவிச்சந்திரன் மன்னார்].

ஈஸ்வரன் [பெருமாள் சசிக்குமார் - அடம்பன்], சிவசங்கர் [நேசராசா உதயகுமார்-தும்பன் கேணி], கிரோ [இராமகிருஷ்ணன் ஜெயராசா - நீர்வேலி], லோகா [செளபற்றிமான் டேவிட் - அரியாலை], தேவா [ஜஸ்ரின் ஷெல்டன் - மன்னார்], புஷ்பகாந்த் [ஐயாத்துரை சிவதர்சன் - ஒஞ்சுக்குளம் முல்லைத்தீவு], பீலிஸ் [சுந்தரலிங்கம் சந்திரகுமார் - வற்றாப்பளை], மனோஜ் [யாழ்ப்பாணம்], வின்சன்ட் [இராசரத்தினம் சுதாகரன் - பரந்தன்], அருள் [முருகையா செல்வச்சந்திரன் - நாவற்குழி], ஆன்டன். [உ]

## உலகச் செய்திகள்

### சீனப் பிரதமர் இந்தியா வருவார்

பீகிங், மே 15

சீனப் பிரதமர் லீ பெங் இந்த வருட இறுதிக்குள் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

1962 ஆம் ஆண்டு இந்திய-சீனப் போர் நடைபெற்ற பின்னர் சீனத் தலைவர் ஒருவர் இந்தியாவுக்கு விஜயம் செய்ய இருப்பது இதுவே முதல் தடவை ஆகும். [இ]

### முன்னேற்றமின்றி பேச்சு முடிவு

பீகிங், மே 15

பீகிங்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்திய-சீன எல்லைப் பேச்சுவார்த்தை முன்னேற்றம் எதுவும் இன்றி முடிவடைந்தது. [இ]

### ரயில்கள் மோதி 40 பேர் மரணம்

டோக்கியோ, மே 15

மத்திய ஜப்பானில் நேற்று இரு ரயில்கள் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் 40 பேர் கொல்லப்பட்டனர் 400 பேர் வரை காயம் அடைந்தனர். [இ]

### பங்களாதேஷில் பனிப் புயல் 26 பேர் பலி

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவிலும் மற்றும் சில பகுதிகளிலும் நேற்று இடம்பெற்ற பனிப் புயலில் 26 பேர் கொல்லப்பட்டனர். 13 பேர் காயம் அடைந்தனர். 5,000 வீடுகள் சேதம் அடைந்தன. [இ]

### பஞ்சாப்பில் வேட்பாளர் கொலை

பஞ்சாப் மாநில சட்டசபை தேர்தலில் போட்டியிட விருந்த சுயேச்சை வேட்பாளரான சீக்கியர் ஒருவர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டார் என அறிவிக்கப்படுகிறது.

மூன்று தினங்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட அவரின் சடலம் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது.

### ஈராக் - பிரிட்டிஷ் படைகள் மோதல்

நிக்கோஸியா, மே 15

ஈராக் வடக்குப் பகுதி குர்டிஸ் நகரான டாஹுக்கில் உள்ள ஜனாதிபதி சதாம் ஹுசேனின் கோடை கால வாசஸ்தலத்தை காவல் புரிந்து வரும் ஈராக் படையினருக்கும், பிரிட்டிஷ் படையினருக்கும் இடையே நேற்று முன்தினம் துப்பாக்கிச் சண்டை இடம் பெற்றது.

அப்போது இரண்டு ஈராக்கிய படையினர் காயமடைந்தனர் என தெரிவிக்கப்பட்டது.

டாஹுக் நகரில் குர்திஷ் அகதிகளை மீளக்குடியமர்த்துவதற்கு தேவையான பாதுகாப்பை வழங்க பிரிட்டிஷ் படையினர் அங்கு நிலை கொண்டுள்ளனர். [இ-எ]

### மகாராணி அமெ. பயணம்

வாஷிங்டன், மே 15

12 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு எலிஸபெத் மகாராணியார் தனது கணவர் எடின்பரோ கோமகனுடன் நேற்று அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டன் போய்ச் சேர்ந்தார். [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயதொழில் வாய்ப்பு

சாவகச்சேரி, மே 15

நுணாவில் மேற்கு பொன்னம்மான் அபிவிருத்தித் திட்டத்தில் உள்ள திருமலை அகதிகளுக்கு சுயதொழில் அபிவிருத்திமுகமாக யாழ்ப்பாணத்திலுள்ள திருமலை தொடர்பகம் முதற்பணம் வழங்க முன்வந்துள்ளது.

தொடர்பகப் பொறுப்பாளர் திரு. ரவி முதற் கட்டமாக 13 பேருக்கு ரூ. 1000, ரூ 1500 வீதம் வழங்கினார்.

[இ-31]

## இன்று

யாழ்ப்பாணம், மே 15

யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கட் சுற்றுப் போட்டியின் அணி ஒழுங்கு தெரிவு தொடர்பான கூட்டம் இன்று மாலை 4-30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

[உ]

## கரபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மே 15

யாழ். மாநகரசபை சனசமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் 6 பேர் கொண்ட சனசமூக நிலைய அணிகளுக்கு இடையிலான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று 15 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

★ கம்பியூட்டர் பயிற்சி ★
BASIC & d BASE - III +
Start On: 18 - 05 - 1991 (3-00 p m.)
IDP Computer Centre,
MAIN ROAD, MANIPAY.
[C-4935]

ஹாட்லிக் கல்லூரி
நூலகர் தேவை
தகைமை / அனுபவம் உள்ளவர்கள்
31 - 05 - 1991 க்கு முன் விண்ணப்பிக்கவும்.
செயலாளர், பா. அ. ச.
ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
[16820]

BITSMANS
INSTITUTES
MANIPAY
A/L தூய பிரயோக கணிதம்
திரு. கமலசிங்கம் B. Sc. (Hons)
91 - Pure — சிக்கலெண்
App. — சடத்துவ திருப்பம்
92 - Pure — ஆள் கூற்று கேத்திரகணிதம்
App. — காவிகள்
ஆரம்பம்: 16 - 05 - 1991
வியாழக்கிழமை 3-30 p m.
[சி 4937]

இலங்கை திறந்த பல்கலைக்கழக
அறிவித்தல்
பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா 90/91
பகுதி I இற்கான இறுதிப் பரீட்சை 1991
(Post Graduate Diploma in Education)
(Part I — Final Exam 1991)
மேற்குறிப்பிட்ட பரீட்சை 1991 மே மாதம் 18, 19, 25, 26 ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றது. இதற்கான அனுமதி அட்டை தபாலில் அனுப்பப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களுக்கு யாழ். பிராந்திய நிலைய அலுவலகத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
மு. தில்லைநாதன்,
உதவிப் பணிப்பாளர்,
யாழ். பிராந்திய நிலையம்,
பிறவுண் வீதி, கொக்குவில்.
[16822]

## பிரெஞ்சு வைத்தியக் குழு தொடர்ந்து பணி புரியும்

யாழ்ப்பாணம், மே 15

பிரெஞ்சு வைத்தியத் தொண்டர் குழு (எம். எஸ். எவ்.) வடக்கு—கிழக்கில் தொடர்ந்து சேவை புரியும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரெஞ்சு அரசின் கீழ் செயற்படும் இந்த அமைப்பின் பிரதிநிதிகள் உலகின் பல நாடுகளில் சேவை புரிந்து வருகின்றனர். அந்த நாடுகளில் உள்ள மனிதாபிமான மிக்க பல அமைப்புக்களின் கோரிக்கைக்கு இணங்கவே, இங்கு தொடர்ந்து தொண்டாற்றுவதற்கு பிரஸ்தாப குழு (எம். எஸ். எவ்.) முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் கொழும்பு வந்துள்ள இந்த அமைப்பின் தலைவர் அங்கு அரசு அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகிறார்.

இவர் ஓரிரு தினங்களில் கொழும்பில் அறிக்கை ஒன்றை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[ஒ-3]

## தனிநபர் ஆணைக்குழு முன் பிரெஞ்சுக் குழு சாட்சியம்

யாழ்ப்பாணம், மே 15

மன்னார், மடுப் பகுதிகளில் கடமையாற்றிய பிரெஞ்சு வைத்தியர்கள் நேற்றுக்காலை கொழும்புக்குச் சென்றனர்.

தாண்டிக்குளத்தில் இடம்பெற்ற விமானத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக கொழும்பில் நடைபெறும் தனிநபர் ஆணைக்குழு முன் சாட்சியம் அளிக்கவே இவர்கள் கொழும்பு சென்றுள்ளனர்.

மந்திகையில் கடமையாற்றும் பிரெஞ்சு வைத்தியர்களும் இன்று கப்பல் மூலம் கொழும்பு செல்வர்.

[ஒ-3]

## சீமெந்து ஊழியர்கள் வரவைப் பதியக் கோரிக்கை

காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த சகல ஊழியர்களும் வாரத்தில் இரண்டு நாட்கள் தமது வரவை உதவி அரசாங்க அதிபர்கள் பணிமனைகளில் பதிவு செய்ய வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளிலும், யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள கூட்டுத்தாபனத்தின் தற்காலிக அலுவலகத்திலும் ஊழியர்கள் தமது வரவைப் பதிவு செய்யலாம்.

காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை நிர்வாக முகாமையாளர் திரு வி. ரி. சிவலிங்கம் இதனை அறிவித்துள்ளார்.

[ஈ]

## வின்னி மண்டேலாவுக்கு 6 வருட சிறைத் தண்டனை!

ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவின் மனைவி வின்னி மண்டேலாவுக்கு ஜொஹன்னஸ் பேர்க் நீதிமன்றம் நேற்று ஆறு வருடச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

நான்கு கறுப்பின இளைஞர்களைக் கடத்தியது, அந்த இளைஞர்களைப் பின்னர் தமது வீட்டில் அடைத்து வைத்து தாக்கியது - ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நீதிமன்ற விசாரணை முடிவில் வின்னி மண்டேலா குற்றவாளியாகக் காணப்பட்டார்.

அதனைத் தொடர்ந்தே இச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்யப் போவதாக வின்னி மண்டேலாவின் வழக்கறிஞர்கள் நீதிமன்றத்தில் விண்ணப்பித்ததைத் தொடர்ந்து நீதிமன்றம் வின்னி மண்டேலாவை பிணையில் விடுதலை செய்தது.

குற்றவாளியாகக் காணப்பட்ட இன்னொரு எதிரிக்கும் ஆறு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

[உ-எ]

## உள்ளூராட்சித் தேர்தல்கள் நீதியாக நடத்தப்பட்டன

### அவதானிப்புக் குழு அறிக்கை

கொழும்பு, மே 15

தெற்கில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தப்பட்டன என்று சர்வதேச அவதானிப்புக் குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவிடம் அவதானிப்புக் குழுத்தலைவர் நேற்று மாலை சமர்ப்பித்த அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை விரைவில் பத்திரிகைகளுக்கு வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

சர்வதேச அவதானிப்புக் குழுத் தலைவரான திரு. டக்ளஸ் மக்மில்லன் இது தொடர்பான செய்தியாளர் மாநாடு ஒன்றையும் நேற்று நடத்தினார்.

இந்தக் குழுவில் 16 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் அங்கம் வகித்தனர்.

[உ-எ]

## பதிவுசெய்ய கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 15

புங்குடுதீவு கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த ஜி. சீ. ஈ (உயர்தர) மாணவர்களில் கலை, வர்த்தகப் பிரிவுகளில் கற்க விரும்புவோர் தமது பெயர்களை நாளை மறுதினத்திற்கு (வெள்ளிக்கிழமை) முன்னர் பதிவு செய்து கொள்ள முடியும்.

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் அல்லது யாழ். சண்மார்க்க வித்தியாலயத்தில் இயங்கும் ... லாத்தில் ... பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

[ஓ-3]

## நாளை தெரிவு

கொழும்பு மே 15

ஐ. தே. க. கட்டுப்பாட்டிலுள்ள மாநகரசபைகளின் மேயர்கள், நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் தலைவர்கள் நாளை வியாழன் தெரிவு செய்யப்படுவர்.

ஸ்ரீ கோத்தாவில் நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சி ... கூட்டத்தில் இத்தெரிவுகள் ஜனாதிபதி பிரேமதாசா தலைமையில் இடம்பெறும்.

[இ-எ]

## தி. மு. காவுக்கு ஆதரவாக பர்னாலா தேர்தல் பிரசாரம்

முன்னாள் ஆளுநர் பர்னாலா தமிழகத்தில் தி. மு. க. வுக்கும் அதன் தோழமைக் கட்சிகளுக்குமான பிரசாரத்தில் கலந்து கொள்கிறார்.

தி. மு. க. அரசு கலைக்கப்பட்ட போது தமிழக ஆளுநராக இருந்த திரு. பர்னாலாவின் மூன்று நாள் தேர்தல் பிரசாரம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது.

தி. மு. க. அரசைக் கலைக்கும் பொருட்டு திரு. பர்னாலா கையெழுத்திட மறுத்ததும் பின்னர் ஏற்பட்ட விளைவுகளை தொடர்ந்து அவர் ராஜினாமாச் செய்ததும் தெரிந்ததே.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை செல்வநாயகம்

M B.E; P.J.K (மலேசிய பென்சனர்)

மலேசியாவில் உயர் கல்வி அதிகாரியாகப் பணி புரிந்து ஓய்வுபெற்ற திரு சின்னத்துரை செல்வநாயகம் M B E; P J.K சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், விசாலாம்பாள் அரியகுட்டியின் மைத்துனரும், காலஞ்சென்ற பத்மாவதி, புஷ்பா (ஓய்வுபெற்ற முன்னை நாள் ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), டாக்டர் செல்வேந்திரா (அவுஸ்திரேலியா), அரிச்சந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயலட்சுமியின் வளர்ப்புத் தந்தையும், டாக்டர் S. S சோமசுந்தரம், மணி (அவுஸ்திரேலியா), விமலா (அவுஸ்திரேலியா), லோகநாதன் (இங்கிலாந்து), பேரின்பநாயகம் (பொலிஸ் அத்தியட்சகர், கொழும்பு), லோகேந்திரராணி, தபாநிதி, புவனேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், விஜயாஸ்வரன் (நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்), சியாமளா, முரளிதரன், அஜித், ரொமேஷ், சாவித்திரி, மாலதி, சித்ரா, மலர்மதி, ராதிகா, சர்மிளா, கவிதா, அரவிந்தன், கார்த்திகா, விஜயந்தி, சாந்தி, அன்ரு ஆகியோரின் பாட்டனும், யாழினி, ஜனகன் ஆகியோரின் பூட்டனும், பாலசிங்கம் (சித்ராலயா உரிமையாளர்), சிறீஸ்கந்தராஜா (பதிவாளர், யாழ். மேல் நீதிமன்றம்) ஆகியோரின் அபிமானத் தந்தையுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் அவரது இல்லமான 'ஸ்ரீசைலம்', 151, கோவில் வீதி, நல்லூரில் 15-5-91 மாலை 3-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்தில் அக்கினியுடன் சங்கமம் ஆகும்.

தகவல்:
புஷ்பா செல்வநாயகம்

[16826]

### திருமதி அமராவதி சிவசம்பு

புங்குடுதீவு மடத்துவெளி 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி அமராவதி சிவசம்பு அவர்கள் 14-5-1991 அன்று செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முத்துக்குமாரு வள்ளியம்மையின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னக்குட்டி சின்னத்தங்கத்தின் அன்பு மருமகளும், மங்கையர்க்கரசி, வரராசசிங்கம் (இளைப்பாறிய அதிபர்), மனோன்மணி, கனகாம்பிகை (கனடா), தவபாலசுந்தரம் (கனடா), திருஞானம் (பிரதேச சபை உ. ப., புங்குடுதீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், குலசேகரம்பிள்ளை, திருநாவுக்கரசு, சண்முகநாதன் (கனடா), ஞானம்மா (ஆசிரியை, யாழ். இ.ம.க.), ஞானவள்ளி (சரவணை நா. வி.), சந்திரகுமாரி (உடையார்கட்டு அ. த. க. பா.) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிறேமராணி (கனடா), கலாராணி ஆசிரியை (புங். கமலாம்பிகை வித்தியாலயம்), மிதிலாராணி, முரளிகரன் (புங். கமநல சேவை நிலையம்), அனுராகரன், கருணாகரன் (கனடா), சந்திரவதனி, தயாவதனி, லதாயினி, லஜினி, திலீபன் (கனடா), கவிதா (கனடா), உஷா, நிஷா, சுதா, சுமித்திரா (கனடா), சுஜிபன் (கனடா), தனுஜா, மயூரன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (புதன்கிழமை) பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கேரதீவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி. திருஞானம்

புங்குடுதீவு - 8. [16719]

### செல்வி ஊர்மிளா இராமலிங்கம்

அராலியை வசிப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுபவருமாகிய செல்வி ஊர்மிளா இராமலிங்கம் 14-5-91 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற முன்னாள் தொழில் நுட்பக் கல்லூரி போதனாசிரியரும், தமிழ் சுருக்கெழுத்தின் தந்தையுமாகிய சி. இராமலிங்கத்தினதும், திருமதி மஹாலட்சுமியின் அன்பு மகளும், நெடுஞ்செழியன் (ஜேர்மனி), அரவிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரது அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 14-5-91 பி.ப. 5 மணியளவில் அராலி தெற்கு மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் வேண்டுகிறேன்.

தகவல்:
தாயார்

"கலைவகம்"
அராலி தெற்கு. [16718]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-05-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org